# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
## 03.07.2009 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

**ரஃபஅ** என்ற சொல்லை கடந்த குத்பாவிலும் நான் விளக்கினேன். **ரஃபஅ** என்றால் தூக்குவது, உயர்த்துவது என்று பொருள். பௌதீகப் பொருட்களை தூக்குவதற்கும் இந்த சொல் பயன்படுகிறது. பெயரையும், புகழையும் உயர்த்துவதற்கும் இந்த சொல் பயன்படுகிறது. **ராஃபிஃ** – உயர்த்துபவன் அல்லாஹ் ஒருவனே ஆவான் என்பது நமது ஈமானாகும். அல்லாஹ் எல்லா வகையான உயர்வையும் வழங்குகிறான். இறைவனது இந்த பண்புப் பெயரைப் பற்றி நான் கடந்த குத்பாவில் விளக்கியுள்ளேன். அல்லாஹ் உயர்வை வழங்குவதோடு, மனிதனால் எண்ணிக்கூடப் பார்க்க முடியாத அளவிற்கு அவன் உயர்வானவனும் ஆவான்.

நெருக்கமாக இருந்தபோதிலும் அவன் தூரமாகவும் இருக்கிறான். எல்லா இடங்களிலும் நிறைந்திருக்கிற அதே வேளையில் அவன் மிக உயர்வாகவும் இருக்கிறான்.

அல்லாஹ் தன்னை **ரஃபீஉத் தரஜாத்** (40:16) என்று கூறுகிறான். அதாவது அல்லாஹ்வின் மதிப்பு, மரியாதை, மகத்துவம் ஆகியவை மிக உயர்ந்ததாகும். அல்லாஹ் எல்லா சிறப்புப் பண்புகளும் உடையவன். ஆதலால் அவன் மேன்மைக்கு உரியவன். அவனது மேன்மையை மனித அறிவு சூழ முடியாது என்பது மட்டுமின்றி அதை விட உயர்வாக வேறு எந்தப் பதவியும் கிடையாது. எனவே அவன் ரப்புல் அர்**ஷ்** (4:16) ஆவான். மிக உயர்ந்த அரியணையில் அவன் வீற்றிருக்கிறான். ஆனால் அர்**ஷி**ல் அமர்ந்து கொண்டு அவன் நிர்வாகம் மட்டும் புரிவதில்லை. மாறாக அவன் எல்லா இடத்திலும் உள்ளான்.

**இதை விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அல்லாஹ்வின் அர்**ஷ்** மிகவும் நுட்பத்திலும் நுட்பமான படைப்பாகும். அதாவது அது மிகவும் உயர்வானதாகும். அதை மனிதனின் பார்வை அடைய முடியாது. அது வானங்கள், பூமி மற்றும் எல்லா திசைகளுக்கும் சமமானதாகும். நவூதுபில்லாஹ் அல்லாஹ்வின் அர்**ஷ்** வானத்திற்கு அருகே உள்ளது. அல்லது பூமியை விட மிக தொலைவில் உள்ளது என்று இதற்குப் பொருள் அல்ல. அவ்வாறு நம்பிக்கை கொள்பவர் சாபத்திற்குரியவர் ஆவார். அல்லாஹ்வின் அர்**ஷ்** வானத்திற்கும் பூமிக்கும் அருகில் உள்ளது.

அர்**ஷ்** என்பது எல்லா மாசிலிருந்தும் தூய்மையானது; பரிசுத்தமானது. எனவே தான் இறைவன் எல்லா இடத்திலும் எப்போதும் இருக்கிறான். எல்லாவற்றையும் கண்காணிக்கிறான். **அல்லாஹ் கூறுகிறான்.**

நீங்கள் எங்கிருந்தாலும் அல்லாஹ் உங்களோடு இருக்கிறான். (57:5).

**மேலும் அல்லாஹ் கூறுகிறான்:**

மூவரின் இரகசிய ஆலோசனையில், நிச்சயமாக அவர்களில் நான்காவதாக அவன் (அல்லாஹ்) இருக்கிறான். (58:8)

**பிரிதோரிடத்தில் அல்லாஹ் கூறுகின்றான்:**

நாம் அவனுக்கு (அதாவது மனிதனுக்கு) அவனது உயிர்நாடியை விட மிக அருகில் உள்ளோம். (50:17)

அல்லாஹ் இந்த வசனங்களில் மிகவும் தெளிவாக கூறியுள்ளான். இக்கருத்தை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் தமது நூல்களில் எழுதியுள்ளார்கள். அதாவது அல்லாஹ் தொலைவில் இருந்தபோதிலும், எப்போதும் மனிதனுக்கு அருகில் உள்ளான். அவன் அர்**ஷி**ல் வீற்றிருந்தபோதிலும் மிக

அருகிலேயே இருக்கிறான். இறைவன் இல்லாத எந்த இடமும் இல்லை. அல்லாஹ் மனிதனுடைய நாடி நரம்பை விட மிக அருகில் இருக்கிறான். இறைவனுடைய நெருக்கத்தைப் பெற்றவர்களிடம் அவனது பண்புகள் மிகவும் பிரகாசமாக பிரதிபலிக்கின்றன. அவர்களுக்கு முன்னேற்றம் கிடைத்துக் கொண்டே இருக்கிறது. இறைவன் தனது நெருக்கத்தை அவர்களுக்கு உணர்த்திக் கொண்டேயிருக்கிறான். அவர்களை எல்லா எதிரிகளிடமிருந்தும் அல்லாஹ் காப்பாற்றுகிறான். அவர்களின் பதவிகளை உயர்த்தவும் செய்கிறான். இருப்பினும், அல்லாஹ்வின் அர்ஷ் மிகவும் உயரியதாகும். எந்த மனிதனும் அதை அடைய முடியாது.

இன்னோரிடத்தில் இந்தக் கருத்தை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு விளக்குகிறார்கள்.

திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான்: நீங்கள் காண்பது போல் அல்லாஹ் வானங்களைத் தூண்களின்றி உயர்த்தியவன் ஆவான். பின்னர் அவன் அர்ஷில் நிலைகொண்டான். (13:3)

இவ்வசனத்திற்கு வெளிப்படையாக கொடுக்கப்படுகின்ற பொருளின்படி இவ்விடத்தில் இதற்கு முன்னர் அல்லாஹ் அர்ஷில் நிலைகொள்ளவில்லையா? என்ற ஒரு சந்தேகம் எழுகின்றது. இதற்குப் பதில் யாதெனில், அர்ஷ் என்பது பௌதீகப் பொருளல்ல. மாறாக, அது நுட்பத்திலும் நுட்பமான, மறைவான நிலையாகும். இது இறை பண்புகள் ஆகும். வானங்கள், பூமி இன்னும் எல்லாவற்றையும் அல்லாஹ் படைத்தான். நிழல் ரீதியாக தனது ஒளியினால் சூரியன் சந்திரன் மற்றும் நட்சத்திரங்கள் ஆகியவற்றிற்கு ஒளியூட்டினான். உவமை அடிப்படையில் மனிதனை தனது வடிவத்தில் படைத்தான். தனது உயரிய நல்லொழுக்கங்களை அவனிடம் ஊதி விட்டான். இவ்வாறு கூறி இறைவன் தனக்கு ஒரு உதாரணத்தை விளக்குகிறான். இறைவனுக்கு எந்த உதாரணமும் கூற முடியாது. அவன் தூயவன். எனவே அர்ஷில் நிலைகொண்டதை எடுத்துரைப்பதன் வாயிலாக இறைவன் தனது தூய்மையை வெளிப்படுத்துகிறான். அவன் எல்லாவற்றையும் படைத்து பின் அந்தப் படைப்பினங்களுள் தன்னையும் ஒருவன் என்று கூறாமல் இறைவன் நுட்பத்திலும் நுட்பமான உயர்ந்தவன் ஆவான் எனக் கூறுகிறான்.

இறைவன் மனிதனை தனது பண்புகளைப் பிரதிபலிப்பவனாக படைத்துள்ளான். எல்லா படைப்பிலும் தனது பண்பை அல்லாஹ் வெளிப்படுத்துகிறான். **அல்லாஹ்வின் நிறத்தை அதாவது பண்புகளை மேற்கொள்ளுங்கள்** (2:139) என்று கட்டளையும் இட்டுள்ளான். எனினும் அவன் மிக உயர்ந்தவன். அவனது மகத்துவம் மிக உயர்ந்ததாகும்.

ஆக, நமது இறைவன் அனைத்து நற்பண்புகளும் உடையவன் ஆவான். அவன் ரஃபீஉத் தரஜாத் (40:16) ஆவான். அர்ஷின் சொந்தக்காரன் ஆவான். இந்த உயரிய பண்புகள் இருப்பினும் அவன் மனிதனுடைய நாடி நரம்புகளை விட மிக அருகில் உள்ளான். இறைவன் மனிதனுடைய நாடி நரம்புகளை விட மனிதனுக்கு மிக நெருக்கமாக இருப்பினும் மனிதப் பார்வை அவனை அடைய முடியாது. மாறாக, இறைவன் தன்னைத்தானே இறை நெருக்கம் பெற்ற மனிதனுக்கு வெளிப்படுத்துகிறான்.

**அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்:**

பார்வைகளால் அவனை அடைய முடியாது. ஆனால் அவன் பார்வைகளை அடைகிறான். (6:104)

மனிதன் தனது அறிவாற்றலாலோ அல்லது தனது பதவி அல்லது மேன்மையாலோ அவனை ஒருபோதும் காண முடியாது. மாறாக, இறைவன் தன்னைத் தானே வெளிப்படுத்துகிறான்.

ஆக, மறைவான திரையில் இருப்பவன்தான் இறைவன். எக்காரணத்தைக் கொண்டும், ஒருபோதும் அவனை உருவத்தில் வடிக்க முடியாது. கிறித்தவர்கள் தங்களது தவறான கொள்கைகளின் காரணமாக இறைவனுக்கு நெருக்கமான ஒரு நபி ஹஸ்ரத் ஈசா (அலை) அவர்களை இறைவனின் பதவிக்கே உயர்த்தி விட்டார்கள். இறைவன் குறைகளற்றவனும், தூயவனும், மேன்மையுடவனும் ஆவான். அவனுக்கு எந்தத் தேவையும் இல்லை.

**ஹஸ்ரத் ஈசா (அலை) அவர்களைப் பற்றி அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:**

ஈசாவும் அவரது தாயாரும் உணவு உண்டு வந்தனர். (5:76)

இந்த வசனத்திலிருந்து இவ்விருவரும் மரணமடைந்து விட்டார்கள் என்று தெரிகிறது. இரண்டாவதாக, ஒருவர் உயிர் வாழ்வதற்கு உணவு உண்ணும் தேவையுடையவராக இருக்கும்போது அவர் இறைவனாக எவ்வாறு இருக்க முடியும்? தாமே தேவையுடையவராக இருக்கும் போது அவர் பிறருடைய தேவையை எவ்வாறு பூர்த்தி செய்ய முடியும்?

ஆக இவ்வாறு இன்னும் பல விதத்தில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை ஒரு சாதாரண மனிதன் என்று நிரூபிக்கின்ற பல ஆதாரங்கள் இருக்கின்றன. அஹ்மதிகளை தவிர முஸ்லிம்களில் பெரும்பான்மையினர் அறியாமையின் காரணமாகவோ அல்லது உலமாக்களை பின்பற்றுவதாலோ திருக்குர்ஆனில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களைப் பற்றி **ராஃபிவுக இலைய்ய** மற்றும் **ரஃபஅஹுல்லாஹு இலைஹி** என்ற சொல்லுக்கு ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தனது பூத உடலோடு வானத்திற்கு சென்று விட்டார்கள் என்றும் இறைவன் அவர்களை உடலோடு உயர்த்தி விட்டான் என்றும் நம்புகின்றனர். பின்னர் ஒரு காலத்தில் உலகத்தை சீர்திருத்துவதற்காக இறங்குவார் என்றும் நம்புகின்றனர். பதினான்காம் நூற்றாண்டில் அவர் வருவார் என்று கூறப்பட்டது. ஆனால் அந்த நூற்றாண்டு கடந்த பிறகும் அவர் வராததால் கியாமத் நாளை ஒட்டி வருவார் என்று கூறப்படுகிறது. இவ்வாறு இன்னும் பல கட்டுக்கதைகள் கூறப்படுகின்றன. இந்த ஆலிம்களுக்கு திருக்குர்ஆன் ஞானம் அறவே இல்லை.

ஆக எவ்வாறிருப்பினும் இந்த தவறான கொள்கையினால் முஸ்லிம்கள் கிறிஸ்தவர்களுக்கு தம்மையும் அறியாமல் வலிமை சேர்க்கிறார்கள் என்பதை முஸ்லிம்கள் அறிவதில்லை. ஏனென்றால் கிறித்தவர்கள் இந்தக் கொள்கையை வைத்துக் கொண்டு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை விட ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கு சிறப்பும் மேன்மையும் இருப்பதாக கூறுகின்றார்கள். சில முஸ்லிம் நாடுகள் மற்றும் முஸ்லிம் சமுதாயத்தின் எழுத்தறிவு உடையவர்கள் இந்தத் தவறை உணர்ந்து கொண்டவாறு இறைவனின் வசனங்களை புரிந்து கொண்டு ஹஸ்ரத் ஈசா (அலை) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள் என்று இவ்வசனங்களைப் படிக்கும் போது தெரிய வருகிறது என ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

கடந்த சில நாட்களுக்கு முன் ஈரான் நாட்டின் அதிபர், கிறித்தவர்களைப் பார்த்து ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார். அவருடைய சொற்பொழிவைக் கேட்கும் போது ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இறந்து விட்டார்கள் என்றுதான் அவர் நம்புவதாக தெரிகிறது. இந்த சொற்பொழிவில் அவர் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை இழிவுபடுத்தவில்லை. மாறாக அவர்களுடைய போதனையின் அடிப்படையில் கிறிஸ்தவர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

ஈரான் அதிபர் எந்த அளவு நேர்வழியில் இருக்கிறார் என்பது ஒரு தனி விஷயம். ஆனால் அவருடைய சொற்பொழிவிலிருந்து தெரிய வருவதன் அடிப்படையில் அவர் ஹஸ்ரத் ஈசா (அலை) அவர்கள் இறந்து விட்டார்கள் என்ற கொள்கை உடையவர் ஆவார் என்பதை மட்டும் நான் கூற விரும்புகிறேன்.

இவ்வாறே துருக்கியின் முபல்லிக் ஜலால் **ஷ**ம்ஸ் சாஹிப் அவர்கள் கூறுகிறார்கள். துருக்கியில் இப்போது வெளியிடப்படுகின்ற திருக்குர்ஆனின் துருக்கி மொழியாக்கங்களில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இறந்து விட்டார்கள் என்ற கருத்தை வெளியிட்டுள்ளார்கள். ஆனால் இப்போதும் முஸ்லிம் உம்மத்தில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் உடலோடு வானத்திற்கு உயர்த்தப்பட்டார்கள் என்றே **ரஃபஅ இலைய்ய** என்ற சொல்லுக்கு விளக்கம் தரப்படுகிறது.

கடந்த சில நாட்களுக்கு முன் மேற்கத்திய நாட்டைச் சேர்ந்த நமது தப்லீகின் கீழுள்ள ஒரு நபர் எனக்கு கடிதம் எழுதினார். அதில் அவர் கூறுவதாவது,

நீங்கள் கூறுகின்றவை யாவும் சரிதான். ஆனால் **ரஃபஅ** என்பது தொடர்பாக நீங்கள் கூறுகின்ற விளக்கம் எனக்கு திருப்திகரமாக இல்லை. நீங்கள் கொடுக்கின்ற விளக்கம் எனக்கு புரிவதில்லை என்று

கூறுகிறார். துணைக்கண்டங்களில் வாழ்கின்ற, மார்கக்த்தில் ஆர்வமுடைய பெரும்பான்மையினர் குறிப்பாக அரபு நாட்டில் வாழ்கின்ற அரபி மொழி நன்கு தெரிந்தவர்கள் கூட ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் உயிரோடு வானத்தில் இருக்கிறார்கள் என்றே நம்புகின்றனர். சில நாட்களுக்கு முன் பாகிஸ்தானிலிருந்து ஜமாஅத்தைச் சேராத ஒருவர் வந்திருந்தார். அவர் திருக்குர்ஆனிலிருந்து ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மரணம் நிரூபணம் ஆகவில்லை என்று கூறினார். அப்போது நான் சில ஆதாரங்களை எடுத்துரைத்தேன். நேரம் குறைவாக இருந்ததால் இன்ஷா அல்லாஹ் இன்னொரு முறை வருகிறேன். அப்போது இதுபற்றி பேசுவோம் என்று கூறி சென்று விட்டார். பல மாதங்கள் கழிந்து விட்டன. இன்னும் அவர் வரவில்லை. நான் கூறுவதன் நோக்கம், முஃபஸ்ஸிரீன்கள், உலமாக்கள் ஆகியோர் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் வானத்தில் உயிரோடு இருக்கிறார் என்று தவறான கருத்தை மக்களின் மனதில் உறுதியாக பதியவைத்துள்ளார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வருகைக்குப் பிறகு இந்தக் கருத்தை இன்னும் அதிகமாக வலியுறுத்தி மக்கள் மத்தியில் பரப்புகிறார்கள். வானத்தில் உயிரோடு இருக்கிறார். அவரே மீண்டும் வருவார் என்று கூறுகின்றனர். ஆனால் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பினும் நல்ல உள்ளம் கொண்ட மக்களுக்கு அல்லாஹ் நேர்வழி காட்டுகிறான்.

கடந்த சில நாட்களுக்கு முன் இங்கிலாந்தைச் சேர்ந்த கிறிஸ்தவ நண்பர் ஒருவர் வந்தார். அவர் அறிவியல் படிக்கும் மாணவர் ஆவார். இவருக்கு அஹ்மதிய்யத்தின் மீது நல்ல ஆர்வம் இருக்கிறது. அவர் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இறைவன் என்றும், பாவமன்னிப்பு கொள்கை உண்மை என்றும் நம்புவதில்லை. இந்த தவறான கொள்கைகளின் காரணமாகவே இவர் இஸ்லாத்தின் பக்கம் நெருங்கியுள்ளார். எனவே, நல்ல உள்ளம் கொண்ட கிறிஸ்தவர்கள் கூட தமது கொள்கைகள் தவறானவை என்று உணர்ந்து இஸ்லாத்தின் பக்கம் நெருங்குகின்றனர். ஆனால் இஸ்லாத்தைப் பாதுகாக்க வேண்டியவர்களே எதிரிகளின் சான்றுகளை உறுதியாக்குகின்றனர். இவ்வாறு எண்ணற்ற கிறிஸ்தவர்கள் அஹ்மதிய்யத்தின் மூலம் இஸ்லாத்தில் நுழைகிறார்கள். இவர்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை ஒரு சாதாரண மனிதர் என்றும், நபி என்றும் நம்புகின்றனர். அவர் தமது காலத்தில் நபியாக வந்தார். பின்னர் இவ்வுலகை விட்டு சென்றடைந்து விட்டார் என்று நம்புகின்றனர்.

ஆக, முஸ்லிம்கள் தமது இந்த கொள்கையின் ஆதாரங்களை திருக்குர்ஆனின் வசனங்களிலிருந்து வைக்கிறார்கள்.

அந்த இரண்டு வசனங்களையும் இப்போது நான் உங்கள் முன் வைக்கிறேன். அதன் பிறகு இவ்விரண்டு வசனங்களுக்கும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வழங்கியுள்ள விளக்கத்திலிருந்து சிலவற்றை எடுத்துரைப்பேன்.

**திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான்:**

ஈசாவே! நான் உமக்கு (இயற்கையான) மரணத்தைத் தருவேன். உமக்கு எனது சந்நிதியில் உயர்வு தருவேன். நிராகரிப்பவர்களி(ன் குற்றச்சாட்டுகளி)லிருந்து உம்மைத் தூய்மைப்படுத்துவேன். உம்மைப் பின்பற்றுபவர்களை, நிராகரிப்பவர்களை விட இறுதி நாள் வரை மேலோங்கச் செய்வேன். பின்னர் என்னிடமே நீங்கள் திரும்பி வர வேண்டியதிருக்கிறது. அப்பொழுது நான், நீங்கள் கருத்து வேறுபாடு கொண்டிருக்கின்றவற்றில் உங்களுக்கிடையே தீர்ப்பு வழங்குவேன் என்று அல்லாஹ் கூறிய நேரத்தை (நினைத்துப் பாருங்கள்). (3:56)

**இன்னோரிடத்தில் அல்லாஹ் கூறுகிறான்:**

நிச்சயமாக நாங்கள் அல்லாஹ்வின் தூதர் மர்யமின் மகன் ஈஸா மஸீஹைக் கொன்றுவிட்டோம் என்ற அவர்களின் கூற்றினாலும் (இத்தண்டனை அவர்களுக்குக் கிடைத்தது). ஆனால் அவர்கள் அவரைக் கொலை செய்யவும் இல்லை. அவர்கள் அவரை சிலுவையில் அறைந்து கொல்லவும் இல்லை. மாறாக, அவர்களுக்கு அ(ந்நிகழ்ச்சியான)து சந்தேகத்திற்குரியதாக ஆக்கப்பட்டது. இதில் கருத்து வேறுபாடு கொண்டவர்கள்

நிச்சயமாக இதுபற்றி ஐயத்திலேயே இருக்கின்றனர். அவர்கள் யூகத்தைப் பின்பற்றுவதல்லாமல் உறுதியான எந்த அறிவும் அவர்களுக்கு இல்லை. அவர்கள் அவரை நிச்சயமாக கொல்லவில்லை. (4:158)

மாறாக, அல்லாஹ் அவருக்குத் தன்னிடம் உயர்வைக் கொடுத்தான். அல்லாஹ் வல்லவனும் நுண்ணிய அறிவுள்ளவனும் ஆவான். (4:159)

**இதுபற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இவ்வசனத்தில் அல்லாஹ் தான் செய்த செயல்களை வரிசையாக எடுத்துரைக்கிறான். இந்த செயலைப் புரிந்தது தான் என்றும் கூறுகிறான்.

1) ஈசாவே நான் உமக்கு மரணத்தைக் கொடுப்பேன்.

2) என் பக்கம் உயர்த்துவேன்.

3) நிராகரிப்பாளர்களின் குற்றச்சாட்டுகளிலிருந்து தூய்மையாக்குவேன்.

4) உம்மைப் பின்பற்றுபவர்களை, நிராகரிப்பவர்களை விட இறுதி நாள் வரை மேலோங்கச் செய்வேன்.

இது தொடர்பாக சிலருடைய மனதில் கேள்வி எழுகிறது. இதை நான் பின்பு இன்னொரு சந்தர்ப்பத்தில் விளக்குவேன். (இன்-ா அல்லாஹ்)

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இந்த நான்கு செயல்களையும் இயல்பின் அடிப்படையிலான வரிசையில் அல்லாஹ் கூறுகிறான். அல்லாஹ்வின்பால் அழைக்கப்படுகின்ற ஒருவர், **இர்ஜிஈ இலா ரப்பிக்க** - நீ உனது இறைவனின்பால் திரும்புவாயாக என்ற கட்டளை கிடைக்கப்பட்ட ஒருவர் முதலில் மரணம் அடைவது அவசியம் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. பிறகு இறைவசனம் மற்றும் ஹதீஸின் அடிப்படையில் ஒரு மூஃமின் மரணமடைந்த பிறகு அவர் அல்லாஹ்வின்பால் உயர்த்தப்படுகிறார். இறைவன்பால் அவர் உயர்த்தப்படுவது உறுதியான ஒன்றாகும் என்பது திருக்குர்ஆன் மற்றும் ஸஹீஹான ஹதீஸ்களின் மூலம் நிரூபிக்கப்பட்ட ஒன்றாகும்.

இவ்விடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு வசனத்தை குறிப்பிடுகிறார்கள். அந்த வசனத்தின் முழுமையான வடிவம் இதுவாகும்.

நீ உன் இறைவனிடம் திருப்தியடைந்தவாறும் அவன் உன்னிடம் திருப்தியடைந்தவாறும் அவனிடம் திரும்பி வருக. (89:29)

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

இறைவன் மஸீஹ் (அலை) அவர்களுக்கு மரணத்தை வழங்கி பிறகு தன்பால் உயர்த்திவிட்டான். இந்த நல்லவரை அல்லாஹ் தன் பக்கம் உயர்த்தி விட்டான் என்று நல்லவர்கள் மரணித்த பிறகு கூறுவது வழக்கம் ஆகும். இந்த வசனம் (89:29) இக்கருத்தை உணர்த்துகிறது. இறைவன் எல்லா இடங்களிலும் உள்ளான். அவன் எங்கும் இருக்கிறான். எல்லாவற்றையும் கவனிக்கின்றான். அவனுக்கு உருவம் கிடையாது. திசை கிடையாது. எனவே இறைவன் ஒருவரை தன் பக்கம் உயர்த்திவிட்டான் என்று கூறினால் அவரது உடல் வானத்திற்குதான் சென்றுள்ளது என்று எவ்வாறு உறுதியாக கூற முடியும். இது உண்மைக்குப் புறம்பானதாகும். நல்லவர்கள் ஆன்மீக அளவில் இறைவன்பால் உயர்த்தப்படுகிறார்கள். தவிர அவர்களது உடலும், எலும்புகளும், சதையும் இறைவன் பக்கம் செல்வதில்லை.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் திருக்குர்ஆனின் வசனங்களை பல கோணங்களில் விளக்குகிறார்கள். **இதை நாம் தூய உள்ளத்தோடு புரிந்து கொள்ளவில்லை என்றால் பிறருக்கு இது ஒருபோதும் புரியாது.** இறைவன் புரியும் திறனை வழங்கவில்லை? என்றால் பிறகு எதுவும் புரியாது. நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மேற்கோளை தொடர்ந்து வாசிக்கிறேன்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நான் நிராகரிப்பாளர்களின் ஆட்சேபனைகளிலிருந்து உம்மை தூய்மையாக்குவேன் என்று அல்லாஹ் ஹஸ்ரத் ஈசாவைப் பார்த்து கூறுகிறான். இதன் பொருள், யூதர்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை சிலுவையில் அறைந்து கொன்று தவ்ராத்தில் சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டவன் சாபத்திற்குரியவன் ஆவான் என்று எழுதப்பட்டுள்ளது. அவன் கண்ணியத்தோடு இறைவனின் பக்கம் உயர்த்தப்படுவதில்லை. எனவே ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கு அல்லாஹ் (திருக்குர்ஆன்) வசனத்தில் நற்செய்தியினை வழங்கியுள்ளான். நீர் இயற்கையான முறையில் மரணமடைவீர். அதன் பிறகு கண்ணியத்தோடு என் பக்கம் உயர்த்தப்படுவீர். உமக்கு சிலுவை மரணம் கொடுப்பதற்காக உமது எதிரிகள் செய்கின்ற அனைத்து முயற்சிகளிலும் அவர்கள் தோல்வியடைவர். என்னென்ன பொய்யான குற்றச்சாட்டுகளுக்கு உம்மை இலக்காக்குகிறார்களோ அவ்வனைத்திலிருந்தும் நான் உம்மை பரிசுத்தமாக்குவேன் என்று அல்லாஹ் கூறுகிறான். சிலுவையில் அடிப்பதன் தீய விளைவுகளாகிய சாபத்திற்கு ஆளாக்குவது, நபித்துவத்தை இழப்பது ஆகியவற்றிலிருந்து உம்மைக் காப்பாற்றுவான்.

இவ்விடத்தில் **தவஃப்பா** என்ற சொல் சிலுவை மரணத்திலிருந்து காப்பாற்றப்படுவதை மிகவும நுட்பமாக சுட்டிக் காட்டுகிறது. ஏனென்றால், **தவஃப்பீ என்ற சொல்லில் இயற்கையாக மரணம் வழங்குதல் என்ற பொருள் மேலோங்கி காணப்படுகிறது.** அதாவது நோயுற்று மரணம் அடைவது (தான் இதற்குப் பொருள்). இது அல்லாமல் அடிபட்டு கடுமையான காயங்களினால் மரணம் அடைவது இதற்குப் பொருள் அல்ல. எனவே திருக்குர்ஆன் விரிவுரையாளர்களும், இறைவனுடைய கஷ்பைப் பெறுகின்ற நல்லடியார்களும் இன்னீ முதவஃப்பீக்க என்ற வாக்கியத்திற்கு பொருள் எழுதும் போது **இன்னீ முமீத்துக்க அதஃபஅ அன்ஃபிக்க** என்று எழுதுகிறார்கள்.

நிராகரிப்பாளர்களிடமிருந்து உம்மைக் காப்பாற்றி பின்னர் உம்மை தூய்மைப்படுத்துவேன் என்ற இந்தப் பகுதி மூன்றாவதாக கூறப்பட்டுள்ளது. இது இயற்கை மற்றும் இயல்பின் அடிப்படையில் மிகவும் பொருத்தமாக மூன்றாவது இடத்தில் வைக்கப்பட்டுள்ளது. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இயற்கை மரணம் அடைந்த நபி மற்றும் தூய்மையாளர் என்ற முறையில் இறைவனின் பக்கம் உயர்ந்துவிட்டார்கள். இதன் அடிப்படையில் காஃபிர்களின் பொய்க் குற்றச்சாட்டுகளிலிருந்து அவர்கள் பாதுகாக்கப்பட்டார்கள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

பிறகு நான்காவதாகஉம்மைப் பின்பற்றுபவர்களை, நிராகரிப்பவர்களை விட இறுதி நாள் வரை மேலோங்கச் செய்வேன் என்று திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ளது. இயல்பின் அடிப்படையில் மிகவும் பொருத்தமாக நான்காவது இடத்தில் வைக்கப்பட்டுள்ளது. ஏனென்றால் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இயற்கையான மரணம் அடைந்து, இறைவளவில் உயர்த்தப்பட்டு, எல்லா குற்றச்சாட்டுகளிலிருந்தும் தூய்மைப்படுத்தப்பட்ட பின் அவர்களைப் பின்பற்றுபவர்களுக்கு இந்த மேன்மை வழங்கப்பட்டுள்ளது. எனவே இந்த வரிசை இயல்பின் அடிப்படையிலான மிகவும் பொருத்தமான வரிசை அமைப்பு ஆகும். (மேலும்) இது இயற்கையின் அடிப்படையிலும் பொருத்தமான வரிசை அமைப்பு ஆகும். இதுவே திருக்குர்ஆனின் மேன்மை மற்றும் உயர் தரத்திற்கு உகந்த வரிசை அமைப்பு ஆகும். ஏனென்றால் கூறப்பட வேண்டிய சம்பவத்தை அதன் வரிசைப்படி கூறுவது அறிவுப்பூர்வமான ஒன்றாகும். இதன்படி திருக்குர்ஆனில் அமைந்துள்ள வரிசை அதன் உயரிய ஞானத்திற்கும், உயர் தகுதிக்கும் மிகவும் ஏற்றதாக அமைந்துள்ளது. திருக்குர்ஆன் ஞானம் மிகுந்த வேத நூலாகும். ஆதலால் இதில் கூறப்பட்டுள்ளவை மிகுந்த ஞானம் வாய்ந்ததாக உள்ளது. இவ்வாறு இயல்பின் அடிப்படையிலான வரிசை முழுத் திருக்குர்ஆனிலும் காணப்படுகிறது. உதாரணமாக சூரா ஃபாத்திஹாவைப் பாருங்கள். அதில் அல்லாஹ் முதலில் தான் ரப்புல் ஆலமீன் என்பதை வெளிப்படுத்துகின்றான். பிறகு ரஹ்மான், ரஹீம், மாலிக்கி யவ்மித்தீன் என்று வரிசையாக கூறுகிறான். இதில் இறை அருளைப் பெறுவதற்கான வழிகளை கூறும்போது இறைவனின் பொதுவான அருளில் துவங்கி சிறப்பான அருள் வரை வரிசையாக கூறுகிறான். ஆக பொதுவான நடைமுறைக்கு ஏற்றவாறும்,

திருக்குர்ஆனின் முழுமைவாய்ந்த சிறப்புத் தன்மைக்கு ஏற்றவாறும் இந்த வசனத்தில் காணப்படுகின்ற நான்கு விஷயங்களையும் இயல்பின் அடிப்படையிலான வரிசையில் அல்லாஹ் கூறுகிறான். ஆனால் காழ்ப்புணர்ச்சி கொண்ட இப்போதைய முல்லாக்கள் யூதர்களின் நடைமுறைக்கு ஏற்ப, அவர்கள் வேதத்தின் சொற்களை அவற்றிற்குரிய இடங்களிலிருந்து புரட்டுகின்றனர் (5:14) என்று அல்லாஹ் கூறுவதுபோல் இவர்கள் செயல்படுகின்றனர். மர்யமின் மகன் மஸீஹ் (அலை) அவர்கள் உயிரோடு இருக்கிறார் என்று நிரூபிப்பதற்காக கையையும் காலையும் உதறிக் கொண்டு அல்லாஹ்வின் வேதத்தில் காணப்படும் சொற்களை இடமாற்றம் செய்யத் துணிந்துவிட்டார்கள். இவர்கள் இறைவனின் வேதத்தில் காணப்படுகின்ற நான்கு சொற்களின் இயல்பின் அடிப்படையிலான வரிசையில் இரண்டு சொற்களை வேண்டுமென்றே இடமாற்றம் செய்கிறார்கள்.

1) நிராகரிப்பவர்களின் குற்றச்சாட்டுகளிலிருந்து தூய்மையாக்குவேன் என்ற வாக்கியமும்,

2) உம்மைப் பின்பற்றுபவர்களை நிராகரிப்பவர்களை விட இறுதி நாள் வரை மேலோங்கச் செய்வேன் என்ற வாக்கியமும் இயல்பின் அடிப்படையில் வரிசையாக அமைந்துள்ளன. ஆனால், நான் உமக்கு நிச்சயமாக மரணத்தை வழங்குவேன் என்ற வாக்கியமும்,

3) என் பக்கம் உயர்த்துவேன் என்ற வாக்கியமும் இயல்பின் அடிப்படையில் வரிசைப்படி இல்லை என்று (இந்த முல்லாக்கள்) கூறுகின்றனர்.

4) நான் உமக்கு நிச்சயம் மரணத்தை வழங்குவேன் என்பது இரண்டாவதாகவும், என் பக்கம் உயர்வை வழங்குவேன் என்பது முதலாவதாகவும் அமைந்திருக்க வேண்டும் என்று இவர்கள் கூறுகின்றனர்.

அந்தோ பரிதாபம்! **அஹ்சனுல் முதகல்லிமீன்** – பேசுபவர்கள் எல்லாரையும் விட மிக அழகாக பேசுபவன் இறைவன். அவன் மிகவும் மகத்துவமிக்கவன் ஆவான். அவனது வேதம், ஞானம் மிகுந்ததாகும். இவ்வளவு நற்பண்புகள் அடங்கிய இறைவன் அமைத்த வரிசையை இவர்கள் மாற்றி, அதன் நுட்பமான ஞானத்தையே அழித்து விட்டார்கள். இந்த நான்கு வாசகங்களில் இரண்டின் வரிசையை ஏற்றுக் கொண்டு இன்னும் இரண்டு வாசகங்களின் இடத்தை மாற்றி அதன் நுட்பமான ஞானத்தை திருக்குர்ஆனின் மேன்மைக்குப் புறம்பானதாக ஆக்கி விட்டார்கள். இரண்டு சொற்கள் சரியாக வரிசையில் அமைக்கப்பட்டுள்ளன என்றும், தமது கொள்கைக்குப் புறம்பாக இருந்த மற்ற இரண்டு சொற்களின் வரிசையை தமது விருப்பத்திற்கேற்ப மாற்றிக் கொண்டார்கள். இவர்கள் தமது விருப்பத்திற்கு ஏற்ப முதலாவது கூறப்பட்டதை இரண்டாவதாகவும், இரண்டாவது கூறப்பட்டதை முதலாவதாகவும் இடமாற்றிக் கொண்டார்கள்.

யூதத்தனத்தை கைக்கொண்டவாறு இவர்கள் இவ்வளவு இடமாற்றத்தை திருக்குர்ஆனில் செய்த பின்பும் தமது நோக்கத்தில் இவர்களால் வெற்றி பெற முடியவில்லை. ஏனென்றால் நாம் உம்மை எம்மருகே உயர்த்துவோம் என்ற வாக்கியத்தை நாம் உமக்கு நிச்சயம் மரணத்தை வழங்குவோம் என்ற வாக்கியத்திற்கு முன்னுள்ளதாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றாலும், இவ்வாறு இடமாற்றியவர்களின் நோக்கம் நிறைவேறாது.

ஏனென்றால் இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்ட பின் இதன் பொருள் இவ்வாறு அமையும்.

ஈசாவே! நாம் உம்மை எம் பக்கம் உயர்த்துவோம்; மரணத்தை வழங்குவோம்.

இது தவறான பொருளாகும். ஏனென்றால் இவ்வாறு பொருள் கொள்ளும் போது ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் வானத்திலேயே மரணிக்க வேண்டும் என்று நம்ப வேண்டியது வருகிறது. காரணம், இங்கு உயர்த்தப்பட்ட பிறகு மரணம் தரப்படுவதாக கூறப்பட்டுள்ளது. இவவிரண்டிற்கும் நடுவே இறங்குவதைப் பற்றி எங்கும் குறிப்பிடப்படவில்லை. இதிலிருந்து மிகத் தெளிவாக ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் வானத்திலேயே மரணம் அடைவார்கள் என்று தெரிகிறது. இவ்விடத்தில் தம் புறமிருந்து ஒரு மூன்றாவது சொல்லை இங்கு இட்டுக்கட்டி கூறுவதாயிருந்தால் அந்த சொல்லை இவ்விரண்டிற்கும் நடுவே வைத்து **யா ஈசா இன்னி ராஃபிஉக்க வ முனஸ்ஸிலுக்க வ முதவஃப்பீக்க** என்று கூறினால்தான் அவர்கள் கொடுக்கின்ற

பொருள் முழுமைபடும். ஆனால் இவ்வனைத்து இடமாற்றம் செய்து இட்டுக்கட்டிக் கூறி இந்தப் பொருளை நாம் கொடுப்பதாக இருந்தால் பிறகு இவ்வசனம் அல்லாஹ்வின் வசனமாக இருக்காது. மாறாக மனித தலையீட்டின் காரணமாகவும், இடமாற்றம் செய்யப்பட்டதன் காரணமாகவும், புதிய சொல்லை அதில் சேர்த்ததன் காரணமாகவும் இது இட்டுக்கட்டிய ஒருவரின் வசனமாகத்தான் கருதப்படும். அவர் சிறிதும் வெட்கமின்றி அகம்பாவத்தால் இவ்வாறு திருக்குர்ஆனில் மாற்றம் செய்துள்ளான் என்றே கருதப்படும். இது மட்டுமல்ல. இவ்வாறு துணிகரமாக செயல்படுவது ஈமானற்ற துரோகச் செயலாகும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களின் விளக்கத்தை ஆதாரமாக காட்டிக் கூறுகின்றார்கள்.

தஃப்ஸீரே மாஅலிம் பக்கம் 162-ல் **யா ஈசா இன்னீ முத்தவஃப்பீக்க வராஃபிஉக்க இலைய்ய** என்ற வசனத்திற்கு விளக்கம் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது.

**ஹஸ்ரத் அலி பின் தல்ஹா (ரலி) அவர்கள் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கின்றார்கள்:**

இவ்வசனத்தில் வந்துள்ள **இன்னீ முதவஃப்பீக்க** என்பதன் பொருள், நான் உமக்கு மரணத்தைத் தரப்போகிறேன் என்பதாகும். இதற்கு திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறியுள்ளனவற்றை ஆதாரமாகக் காட்டுகிறார்கள்.

**அல்லாஹ் கூறுகின்றான்:** உங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள மரணத்திற்குரிய வானவர் உங்களை மரணமடையச் செய்வார் என்று நீர் கூறுவீராக. (32:12)

பிறகு அல்லாஹ் கூறுகிறான்: அவர்கள் தூய்மையானவர்களாக இருக்கின்ற நிலையில் வானவர்கள் அவர்களின் உயிர்களைக் கைப்பற்றுவார்கள். (16:33)

**இன்னோரிடத்தில் கூறுகிறான்:**

(நிராகரிப்பவர்களாகிய) அவர்கள் தமக்குத்தாமே அநீதியிழைத்துக் கொண்டிருக்கும் வேளையில், வானவர்கள் அவர்களை மரணிக்கச் செய்கின்றனர். (16:29)

ஆக, ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களின் கொள்கை ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள் என்பதாகும். ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் திருக்குர்ஆனைப் புரிந்து கொள்வதில் முதன்மையானவர்களுள் ஒருவர் ஆவார். திருக்குர்ஆனுக்கு விளக்கம் தருவது தொடர்பாக ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களுக்காக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஒரு துஆவும் உள்ளது. எனவே இந்த மூன்று நான்கு வசனங்களுக்கு மட்டும் ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் விளக்கம் தரவில்லை. மாறாக, திருக்குர்ஆனில் முதலிலிருந்து கடைசி வரை எங்கெல்லாம் **தவஃப்பீ** என்ற சொல் வருகிறதோ அங்கெல்லாம் **தவஃப்பா** என்ற சொல்லுக்கு **மவ்த் - மரணம்** என்றுதான் பொருள் கொடுக்கப்படுகிறது என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பிரகடணம் செய்கிறார்கள்.

இன்னோரிடத்தில் **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள்** திருக்குர்ஆனிலிருந்து மிகவும் உறுதியாக நிரூபணம் செய்தவாறு இவ்வாறு கூறுகிறார்கள்:

ஈசா (அலை) அவர்கள் உண்மையிலேயே மரணத்திற்குப் பிறகுதான் உடலோடு உயர்த்தப்பட்டார்கள் என்றால் திருக்குர்ஆனில் **யா ஈசா! இன்னீ முதவஃப்பீக்க சும்ம முஹ்யீக்க சும்ம ராஃபிஉக்க மாஅ ஜஸதிக்க இலஸ்ஸமாயி** என்று வசனம் அமைந்திருக்க வேண்டும்.

பொருள்: ஈசாவே! உமக்கு மரணத்தைத் தருவேன். பிறகு உயிரை வழங்கி உம்மை உடலோடு வானத்திற்கு உயர்த்துவேன். ஆனால் **முதவஃப்பீக்க** என்ற சொல்லைத் தொடர்ந்து திருக்குர்ஆனில் இந்த

இடத்தை தவிர எங்குமே **ராஃபிஉக்க** என்று வரவில்லை. அவ்வாறு **சும்ம முஹ்யீக்க** என்று திருக்குர்ஆனில் எங்காவது வந்துள்ளது என்றால் எடுத்துக்காட்டுங்கள். ஹஸ்ரத் ஈசா உண்மையில் இறந்து விட்டார்கள் என்று உறுதியாகி விட்டது. எனவே **திருக்குர்ஆனில் எங்கெல்லாம் ராஃபிஉக்க, பல் ரஃபஅஹுல்லாஹு இலைஹி என்று வந்துள்ளதோ அங்கெல்லாம் ரூஹை கைப்பற்றுதல் என்று தான் பொருள்.** இது எல்லா மூஃமின்களுக்கும் அவசியமானதாகும் என்ற வாதத்தை நான் உறுதியாக உங்கள் முன் வைக்கிறேன். தேவையானதை விட்டு விட்டு தேவையற்றதை மனதில் கொள்வது திட்டவட்டமான அறியாமையாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஈசா (அலை) அவர்களின் மரணம் நிரூபணம் ஆகின்ற 23 வசனங்களை திருக்குர்ஆனிலிருந்து எடுத்துரைக்கின்றார்கள். இந்த இடங்களில் எங்கெல்லாம் **தவஃப்பீ** என்ற சொல் வருகிறதோ அங்கெல்லாம் மரணம் என்றுதான் பொருள் கொள்ள வேண்டும் என்று நிரூபித்துள்ளார்கள். பிறகு இஸாலா அவ்ஹாம் என்ற நூலில் 30 வசனங்களைக் கொண்டு ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள் என்று நிரூபித்துள்ளார்கள்.

ஆக, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மிகவும் விரிவான புத்தகத்தை எழுதியுள்ளார்கள். அதில் திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸின் அடிப்படையில் ஹஸ்ரத் ஈசா (அலை) அவர்களின் மரணத்தை நிரூபித்துள்ளார்கள். இது முஸ்லிம்களுக்கு மிகவும் தெளிவான அத்தாட்சி ஆகும். கிறிஸ்தவர்களுக்காக அவர்களின் நூல்களிலிருந்தே ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் ஒரு சாதாரண மனிதர் என்ற அடிப்படையில் அவர் அல்லாஹ்வின் விருப்பத்தையும் நெருக்கத்தையும் பெற்ற ஒரு மனிதர் என்பதை கூறி அவரது ஆன்மீக உயர்வை ஆதாரங்களுடன் நிரூபித்துள்ளார்கள். ஹஸ்ரத் ஈசா (அலை) அவர்கள் அல்லாஹ்வின் மகன் என்று தவறாக நம்பிக்கை கொண்டதன் காரணமாக கிறித்தவர்கள் **ஷி**ர்க்கில் மூழ்கிவிட்டார்கள்.

ஹஸ்ரத் ஈசா (அலை) அவர்கள் வானத்தில் இருக்கிறார்கள். அவர் ஒரு நாள் கீழே வருவார் என்ற பொய்யான கொள்கையிலிருந்து தவ்பா செய்யுங்கள் என்று கூறி முஹம்மதிய மஸீஹ் சரியான நேரத்தில் இறங்கியுள்ளார். எனவே அவரைப் பின்பற்ற இறைவன் இந்த முஸ்லிம்களுக்கு நல்லறிவை வழங்குவானாக. மேலும் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கட்டளைக்கு ஏற்ப ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்து ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சலாத்தை தெரிவிக்க வேண்டும். இதன் மூலமாக இந்த முஸ்லிம்கள் தமது இம்மையையும் மறுமையையும் சீராக்குபவர்களாக ஆக வேண்டும்.

இக்காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நூல்கள் மட்டுமே சத்தியத்திற்கும் அசத்தியத்திற்கும் மத்தியில் நடைபெறுகின்ற போர்களத்தில் உறுதியான ஆதாரங்களைக் கொண்டு எதிரியின் வாயை அடைப்பதற்குரிய ஆயுதங்கள் என்பதை அஹ்மதிகள் நன்றாக நினைவில் கொள்ளுங்கள். நான் வாசித்திருக்கின்ற மேற்கோள்கள் இது சம்பந்தமான ஓரிரு மேற்கோள்கள்தான். ஆனால் இன்னும் எண்ணற்ற மேற்கோள்கள் இவ்வாறு இருக்கின்றன. அவைகளை வாசிக்கத் துவங்கினால் பல மணி நேரங்கள் தேவைப்படும். இதில் பிற கருத்துக்களைத் தவிர ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மரணம் மற்றும் ஆன்மீக உயர்வு தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எழுதியுள்ளார்கள்.

இங்கு ஒரு வி**ஷ**யத்தை கூற விரும்புகிறேன். அது இங்குள்ள சமூகத்தில் வாழ்ந்து வருபவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நூட்கள் மிகவும் கடினமானவை. எனவே அதற்கு பதிலாக எழுதப்படிக்கத் தெரிந்தவர்களுக்காக சொந்தமாக புத்தகங்கள் எழுத வேண்டும் என்று எண்ணுகிறார்கள். சொந்தமாக புத்தகங்கள் எழுத வேண்டும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் அதனை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நூல்கள் மற்றும் கருத்துக்களை அடிப்படையாக வைத்தே அமைக்க வேண்டும். இது கடினமாக உள்ளது. எனவே இந்த நாட்டின் குழந்தைகள், இளைஞர்கள், பெரியவர்கள் ஆகியோர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நூட்களை வாசிக்க முடியாது. இந்த நூட்கள் எல்லாம் பாகிஸ்தான் அல்லது இந்திய மக்களுக்காக எழுதப்பட்டவையாகும் என்று எண்ணுவது தவறாகும். இளைஞர்களும் குழந்தைகளும் இதை படிக்க முன்வர வேண்டும். இதை வாசிப்பதற்கு ஆர்வம் ஊட்ட வேண்டும். பெரியவர்கள்

இந்தப் பணியை செய்ய வேண்டும். ஜமாஅத்தின் அமைப்பு மற்றும் கிளை அமைப்புகள் இந்தப் பணியை செய்ய வேண்டும்.

இந்த நூல்கள் எல்லாம் மிகவும் கடினமாக இருப்பதன் காரணமாக இதை வாசிக்க முடியாது என்று கூறினால் இது தவறாகும். இவ்வாறு சிந்திப்பதால் மெல்ல மெல்ல நாம் இந்தக் கருத்துக்களிலிருந்து விலகி வெகுதூரம் சென்று விடுவோம். ஏனென்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சொந்த சொற்களில் உள்ள மகத்துவமும் சிறப்பும் அதன் கருத்துக்களை கூறுவதால் அல்லது அதன் சாராம்சத்தை மட்டும் கூறுவதால் உணர முடியாது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நூல்கள் பல தலைப்புகளில் உள்ளன. அவைகளின் மேற்கோள்கள் மொழியாக்கம் செய்யப்படுகின்றன. Essence of Islam -ன் ஐந்து பாகங்கள் தயாராக உள்ளன. இன்னும் அதிகமாக அது தயார் செய்யப்படுகிறது. இந்த நூலை ஆங்கிலம் தெரிந்தவர்கள் படிக்க வேண்டும். அசலுக்கும் மொழியாக்கத்திற்கும் இடையே சற்று வேறுபாடு ஏற்பட்டு விடுகிறது. முழுமையாக தர்ஜுமா செய்யப்பட்ட நூல்கள் ஒவ்வொரு அஹ்மதியின் வீட்டிலும் இருக்க வேண்டும். இன்-ா அல்லாஹ் மிக விரைவில் பராஹீனே அஹ்மதிய்யா என்ற நூலும் மொழியாக்கம் செய்யப்பட்டு வெளிவரும் என்று நான் நம்புகிறேன். ஆங்கிலத்தை படித்தவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நூல்களை விலைக்கு வாங்குங்கள். படியுங்கள். அதிலிருந்து ஆதாரங்களைத் திரட்டுங்கள் அதன் மூலம் எதிர்ப்பாளர்களை ஏற்றுக் கொள்ளுமாறு செய்யுங்கள். உருது படிக்கத் தெரிந்தவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நூல்களின் முழு Set வைத்திருக்க வேண்டும். இப்போது புதிய புத்தகங்கள் வெளிவருகின்றன. இன்னும் கம்ப்யூட்டர்களில் பதியப்பட்டும் வருகிறது. இன்ஷா அல்லாஹ் ஜல்ஸாவிற்குள் சில பாகங்கள் வெளிவரும். அதையும் தமது வீடுகளில் புத்தகம் இல்லாத அஹ்மதிகள் வாங்க வேண்டும்.

**பிழை திருத்தம்**

12.06.09 குத்பாவின் முதல் பாராவின் ஆறாவது வரியில் உள்ள வாக்கியத்தை **“உலகக் காரியங்களில் எந்த ஆர்வமும் காட்டியதில்லை என்றாலும், பௌதீக மற்றும் குடும்பப் பொறுப்புகளை நிறைவேற்றுவதிலும் அவர்களுக்கு ஈடு இணை யாரும் இல்லை”** என்று திருத்தி வாசிக்குமாறு சகோதரர்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

*- வெளியீட்டாளர்.*

கடந்த ஒரு குத்பாவில் ஒரு பெண்மணியின் கடிதத்தை நான் குறிப்பிட்டிருந்தேன். அதில் அந்தப் பெண், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நூல்களில் அவர்கள் விளக்குகின்ற இறைப்பண்புகளைப் படித்த பிறகு எனக்கு திருக்குர்ஆனின் கருத்துக்கள் நன்றாக புரிகின்றன என்று கூறுகிறார். எனவே திருக்குர்ஆனை புரிந்து கொள்வதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நூலை வாசிப்பது மிகவும் அவசியமாகும்.

அல்லாஹ் நம் அனைவருக்கும் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. ஆமீன்.

★ ★ ★ ★ ★

JUMUA KUTHBA
HADHRAT KHALIFATUL MASIH V
AT BAITUL FUTUH MOSQUE, LONDON
ON 03.07.2009

Translated by : **Maulavi S. ABDUL QADIR**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**